ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ    அதிவிசேஷமானது

අංක 1948/38 – 2016 ජනවාරි 07 වැනි බ්‍රහස්පතින්දා – 2016.01.07
*1948/38 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 07 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

*38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழான கட்டளை*

*2016 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்கக் கட்டளை*

*எனது குறிப்பு இல. : 4-3/9/2015/டபிள்யூஎஸ்/93.*
*பிரதேச செயலாளர் இல. : வீஈ/பி.செ./எல்எல்டீ/காணி/ஐஆர்யூபி/13.*

காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 38 ஆம் பிரிவின் காப்பு வாசகம் (அ) வினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், காணி அமைச்சர் எம். கே. ஏ. டீ. எஸ். குணவர்தன ஆகிய நான், கீழ் விபரிக்கப்பட்ட அட்டவணையின் 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட காணி எடுத்தல் உத்தியோகத்தருக்கு அல்லது அவரால் அதிகார மளிக்கப்பட்ட எவரேனும் உத்தியோகத்தர் ஒருவருக்கு அவ் அட்டவணையின் நேரொத்த 2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட காணியின் உடைமையைப் பொறுப்பேற்பதற்கு இத்தால் கட்டளையிடுகின்றேன்.

எம். கே. ஏ. டீ. எஸ். குணவர்தன,
காணி அமைச்சர்.

காணி அமைச்சு,
“மிஹிகத மெதுர”,
ரஜமல்வத்தை வீதி, பத்தரமுல்லை,
*2016.01.06.*

அட்டவணை

*1.* **காணி எடுத்தல் உத்தியோகத்தர்** : பிரதேச செயலாளர், வலிகாமம் கிழக்கு.

*2.* **காணியின் விபரம்** : வட மாகாணத்தில், யாழ்ப்பாண மாவட்டத்தில், வலிகாமம் கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவில், இல. ஜே/ 257- இருபாலை தெற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில், இருபாலை கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் 2015.09.28 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட வைஏ/கேபிவை/2015/217 ஆம் இலக்க முதற் சுவட்டு வரைபடத்தில் துண்டு ‘ஏ’ எனக் குறிப்பிடப்பட்டிருக்கும் சுமார் 0.2339 ஹெக்டயார் விஸ்தீரணம் கொண்ட காணித் துண்டின் எல்லைகள் :

***01. துண்டு ‘ஏ’ - கட்டுவாசல் மற்றும் தாழையடி - விஸ்தீரணம் : சுமார் 0.2339 ஹெக்டயார்***

வடக்கு : மாணிக்கம் பசுபதி, இராமலிங்கம் செல்லையா ஆகியோர் உரிமை கோரும் காணி ; கிழக்கு : இராமலிங்கம் செல்லையா, பொன்னையா இரத்தினசபாபதி ஆகியோர் உரிமை கோரும் காணி ; தெற்கு : பொன்னையா இரத்தினசபாபதி உரிமை கோரும் காணி மற்றும் பாரதி ஒழுங்கை ; மேற்கு : பாரதி ஒழுங்கை, மாணிக்கம் பசுபதி உரிமை கோரும் காணி.

*01-808*